# பாரம்பரிய மீன்பிடிக்கும் கடல் அட்டைப்பண்ணை வளர்ப்பிற்கும் இடையே உள்ள முரண்பாடுகள்: பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட கிராஞ்சி கிராம சேவையாளர் பிரிவை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஆய்வு


**ஜட்சன்,தா., பாரதி, பொ.**

புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

tjadsan@gmail.com



*பாரம்பரிய மீன்பிடியாளர்களுக்கும், கடலட்டைப் பண்ணையாளர்களுக்கும் இடையே முரண்பாடுகள் கணிசமானவளவு அதிகரித்துவருவது பல்வேறு தரப்பினராலும் அறியப் பட்டுள்ளது அவ்வகையில் இவ்வாய்வானது கடல் அட்டை பண்ணை உற்பத்தி அதிகரிப்பை அடையாளப்படுத்தல். அதனால் ஏற்படும் பாதிப்புகளை இனங்காணல். பாரம்பரிய மீன்பிடி நடவடிக்கைக்கும் கடல் அட்டைப் பண்ணை வளர்ப்பிற்கும் இடையிலான முரண்பாடுகளை அடையாளப்படுத்தல் என்பவற்றினை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வானது முதலாம் நிலைத்தரவுகளையும் இரண்டாம் நிலைத்தரவுகளையும் அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத் தரவு மூலங்களாக வினாக் கொத்து மற்றும் நேர்காணல், நேரடி அவதானிப்பு என்பவற்றின் மூலம் திரட்டப்பட்ட தகவல்கள் பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாம் நிலை தரவு மூலங்களாக கிராம சேவகர் பதிவேடுகள், மீனவர் சங்கப் பதிவேடுகள், கடல் சார் நிறுவன அறிக்கைகள் என்பவற்றின் ஊடாக பெறப்பட்ட தரவுகள் கொள்ளப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட தரவுகள் விபரணப் புள்ளி விபரவியல் நுட்பத்தின் ஊடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன. இவற்றினை அடிப்படையாக வைத்து நோக்கின் ஆய்வு பிரதேசத்தில் கடல் அட்டைப் பண்ணைகளின் அமைவு பாரம்பரிய மீன்பிடி நடவடிக்கைகளுக்கு இடையூறாக காணப்படுவதுடன். பாரம்பரிய மீன்பிடி பிரதேசங்களை ஆக்கிரமித்து செல்லும் போக்கும் காணப்படுகின்றது. மேலும் கடலட்டைப் பண்ணைகள் மீனவர்களின் போக்குவரத்திற்கு இடையூறாக காணப்படுகின்றன. கடலட்டைப் பண்ணையாளர்களின் செயற்பாடுகள் மீனவர்கள் மத்தியில் உளவியல் தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றது. கடலட்டைப் பண்ணைகளினால் ஏற்பட கூடிய சூழல்ரீதியான தாக்கமும் இனங்காணப்பட்டுள்ளது. இவற்றின் அடிப்படையில் நோக்கின் இவ் கடலட்டைப் பண்ணைகளின் பரந்துபட்ட அமைவானது மீனவர்களுக்கான இடையூறுகளை ஏற்படுத்துவதனால் முரண்பாடுகளும் ஏற்படுகின்றன. கடலட்டைப் பண்ணைகளை மீன்பிடிக்கு இடையூறு இல்லாத பொருத்தமான இடங்களில் அமைப்பதற்கு அனுமதியை வழங்குதல், கடலட்டைப் பண்ணைகளின் பரந்துபட்ட அமைவினை சரி செய்தல், சூழலுக்கு பாதிப்பு இல்லாதவாறு கடலட்டைப் பண்ணை செய்யும் கால அளவை மட்டுப்படுத்தல், கடலட்டைக் குஞ்சுகளை உற்பத்திப் பண்ணையாளரிடம் பெற்று கொள்ள ஊக்குவித்தல் மற்றும் அனைத்து மீனவர்களும் பயன் பெறும் வகையில் சுழற்சி முறையில் கடலட்டைப் பண்ணைக்கான அனுமதியை வழங்கல் என்பன ஆரோக்கியமான கடல்சார் பொருளாதார வளர்ச்சிக்கு கைகொடுக்கும்.*



**திறவுச்சொற்கள் :** கடல் அட்டைப்பண்ணை, பாரம்பரிய மீன்பிடி, கிராஞ்சி